# பிரச்னையை எதிர்கொள்ள திறந்த மனம் அவசியம்

## தோகா வங்கி சிஇஓ சீதாராமன் அறிவுரை

பிரச்னைகளை எதிர்கொள்ள திறந்தமனதுடன் இருப்பது அவசியம் என்று ஜிஆர்சி உச்சி மாநாட்டில் தோகா வங்கி சிஇஒ சீதாராமன் பேசினார்.

மெட்ரிக் ஸ்ட்ரீம் நிறுவனம் ஆளுகை, இடையூறு, சந்தை மற்றும் தர மேலாண்மை ஆகியவற்றில் ஏற்படும் பிரச்னைகளுக்கு தீர்வுகளை கொடுக்கும் ஓர் அமைப்பாகும்.

மெட்ரிக் ஸ்ட்ரீம் நிறுவனத்தின் 4ஆம் ஆண்டு ஜி.ஆர்.சி உச்சி மாநாடு– 2016 வாஷிங்டனில் நடந்தது.இவ்விழாவில் சிறப்பு விருந்தினரான தோகா வங்கி குழுமத்தின் தலைமை செயல் அதிகாரி சீதாராமன் பேசியதாவது:வங்கியின் முக்கிய போக்குகளாக இருப்பது பொருளாதார முன்னேற்றம், தொழில் நுட்ப முன்னேற்றம், இணைய பாதுகாப்பு, நிதி சம்பந்தப்பட்ட நிகழ்வுகள், சட்டத்தின் ஒழுங்குமுறை விதிகளை பின்பற்றுதல் ஆகியவைதான். ஜிஆர்சி முன்னேற்றத்திற்கு மிக முக்கியமான கட்டமைப்பாகும். உலக ஆளுகைத்திறன் தற்போது கார்ப்பரேட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வங்கியாளர்கள் இந்த ஆட்சி நெருக்கடியை எப்படி கையாளப்போகிறார்கள் என்பது இடர் மேலாண்மை, ஊதியம், சலுகை அமைப்பு, நிறுவன ஆய்வு வாரியம், பங்கு வைத்திருப்பவர் கூட்டு ஆகியவற்றை மறுபரிசீலனை செய்து இவற்றை சீர் செய்வது பொறுத்தே உள்ளது.

வங்கியாளர்கள் அனைத்து செயல்களிலும் திறந்த மனதுடன் இருக்க வேண்டும். பிரச்சனைகளை எதிர்கொள்ளவும், இக்கட்டான சூழ்நிலையிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவும் திறந்த மனம் அவசியம்.


சீதாராமன்

ஒரு நிறுவனத்தை பொறுத்தவரை சி.இ.ஓ மற்றும் இயக்குனர்கள் வேலைகளை பிரித்து கொள்ள வேண்டும். பங்குதாரர்கள்நிதி குற்றம், வரி ஏய்ப்பு, செய்யும் முதலீடு, தனி நபர் மற்றும் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் ஆகியவற்றில் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

மூலதன சந்தைகள் குறிப்பாக நிதி சந்தைகளில் மிக கவனத்துடன் இருக்க வேண்டும். ஒரு நிறுவனம் பிரச்னைகளை எப்படி கையாளுவது என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். மேற்சொன்ன தகவல்களை கடைப்பிடித்தாலே ஜி.ஆர்.சி ஆற்றல் வாய்ந்த மற்றும் வாய்ப்புகள் நிறைந்த இடமாக இருக்கும். மேலும் இவை முன்னேற்ற பாதையில் சென்று கொண்டே இருக்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இவ்விழாவில் ஆய்வாளர்கள், துறை வல்லுனர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் பங்கேற்றனர்.